செய்தி வெளியீடு எண்: 423 நாள்: 05.08.2013

# வேளாண்மைத்துறையில் கட்டணமில்லா தொலைபேசி அழைப்பு சேவை வசதி குறித்த பத்திரிக்கைச் செய்தி

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பகுதி விவசாயத்திற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணையின்படி 2013, ஆகஸ்டு 2ஆம் தேதியிலிருந்து பாசன நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

விவசாய பெருமக்கள் அதிகபட்ச பரப்பில் சம்பா சாகுபடி பணிகளை மேற்கொள்ள வசதியாக சாகுபடிக்கு தேவையான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் ஆகிய இடுபொருட்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் விற்பனை மையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப செயல் திறனை அளிக்கும் வகையில் கிராம அளவில் முகாம்கள் நடத்தப்படுகின்றன. மாவட்ட மற்றும் வட்டார அளவில் தகவல் சேவை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மாநில அளவில், விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் போன்ற மிகவும் அவசியமான இடுபொருட்கள் குறித்த சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு தீர்வு அளிக்கும் வகையில் வேளாண்மைத்துறை கட்டணமில்லா தொலைபேசி அழைப்பு வசதி செய்யப்பட்டுள்ள எண் 1800-425-1501 2013 ஆகஸ்டு 6 முதல் செயல்படத் துவங்கும். விவசாயிகள் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் இந்த எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**